







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 7 12.02.2025



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனின் முத்துக்கள்
2. எட்டுமிரண்டும் அறிவித்தவர்
3. புருஷார்த்த காஷ்டை
4. ஸ்ரீ கிருஷ்ண லீலா தத்துவம்
5. பாஞ்சராத்ரம் விஹகேந்த்ர ஸம்ஹிதை

***************************************



# 1.ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனின் முத்துக்கள்

ஆசார்யனை தெய்வத்தை உபாஸிப்பது போல் உயாஸிக்க வேண்டும் என்று ஸ்வாமி தேசிகன் கூறினர். இதை ஸ்வாமி ந்யாஸ விம்சதியில் காரணத்துடன் விளக்கி அருளினார். **ஏன் உபாஸிக்கவேண்டும் என்பதை இங்கு கூறுவது நல்லது தானே!**

1.அக்ஞானமெனும் இருளை அகற்றுவார்.
2. பாபங்களைப் போக்குவார்
3.தனக்கு நிகராக்குவார்.
4. வித்யையை அளித்து புதுப்பிறவியையே ஏற்படுத்தி விடுவார்.(இதற்கு என்று பொறுள்)
5.திவ்யமான பார்வையை அளிப்பார்.
6.தடையில்லாத கருணைபுரிவார்
7. திடமான ப்ரீதியை உண்டுபண்ணி ஏன்றைக்குமே சேஷியாக இருப்பார்.

இவையனைத்தும் எம்பெருமான் பண்ணும் செயலே. நாம் ப்ரத்யுபகாரம் பண்ணுவதற்காக உபாஸிக்கிறோம் என்ற எண்ணம் தவிர்ந்து ஸத்துக்களால் உபாஸிக்கப் படுவார் ஸதா சார்யன்.

இந்த ச்லோகத்தில் எல்லா ஆசார்யர்களையும் எல்லா சிஷ்யர்களும் உபாஸிக்க வேண்டும் என்று கூறிய ஸ்வாமி தேசிகனை அவர்கள்போல் ஒருவர் என்று எண்ணலாகாது.

நமக்கு விளங்கும் வகையில்

**அத்யாஸீந்துரங்க வக்த்ரவிலஸத்-ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸநாத் ஆசார்யா**
**திஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே**

என்று தனது தெய்வத்தன்மையை உணாதியருளின பிறகும் நாம் ஸ்வாமி தேசிகனை பகவான்என்று சொல்ல கூசுவது ஏனோ ! திருவேங்கடநாதன் என்னும் குருவாய் நின்றவன் திருவேங்கட முடையான் தானே

ஸ்ரீ ஸேவா ஸ்வாமி நூற்றாண்டு விழா மலர்



# 2.ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனின் முத்துக்கள்
# ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன்
# ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேசிகன்
## எட்டுமிரண்டும் அறிவித்தவர்

எட்டுமிரண்டுமறியாத எம்மை இவை அறிவித்து
எட்டவொண்ணாத இடம் தரும் எங்களம்மாதவனார்
முட்ட வினைத்திரள் மாள முயன்றிடுமஞ்சலென்றார்
கட்டெழில் வாசகத்தால் கலங்கா நிலை பெற்றனமே
(அதிகாரஸங்க்ரஹம்)

ஸ்ரீவைஷ்ணவன் ஒவ்வொருவனும் அவரவர்களுடைய ஆசார்யர்களை ஆச்ரயித்து நம் ஸம்ப்ரதாயத்தையும், நம் ஸம்ப்ரதாயார்த்தங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களைக் காட்டிலும் ஸ்ரீவைஷ்ணவனுக் குள்ள ஏற்றத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

சாதாரணமாக ப்ராஹ்மணனை த்விஜன் (இரண்டு பிறப்புடையவன்) என்று கூறுகிறோம். தாயார் வயிற்றிலிருந்து பிறப்பது ஒரு பிறப்பு. பிறகு உபநயனமாகி காயத்ரீ மஹா மந்திரத்தை உபதேம் பெறுவது மறு பிறப்பு. இப்படி த்விஜன் என்றழைக்கப்படுகிறான். ஆனால் ஸ்ரீவைஷ்ணவனை த்ரிஜன்மன் (மூன்று பிறப்புடையவன்) என்கிறோம். மேற்கூறிய இரண்டு பிறப்புக்களும் இவனுக்கும் இருப்பினும் மூன்றாவது ஜன்மாவாகிற வைஷ்ணவ ஜன்மாவை இவன் ஆசார்யனை ஆச்ரயித்து பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொள்வதின் மூலம் அடைகிறான். ஆசார்யன் பஞ்ச ஸம்ஸ்காரத்தை செய்வித்து இவனுக்கு திருமந்திரம், த்வயம், சரம ச்லோகம் இவைகளை உபதேசிக்கிறார். இவ்வுபதேசங்களைப் பெற்று இவைகளின் பொருள் களையும் ஆசார்யனிடமிருந்து அறிகிறான். நாமெல்லோரும் விஷ்ணு பக்தர்கள். ஸ்ரீமந் நாராயணனையே பரம் பொருளாகக் கொண்டவர்கள். பரம் பொருளான ஸ்ரீமத் நாராயணனே நமக்குத் தஞ்சம். அவ்வெம்பெருமானிடத்திலேயே நாம் பக்தி செய்து அவனருள் பெற வேண்டும். அவனருள் பெற்று அவனுக்கே கைங்கர்யம் செய்ய வேண்டும். அவனைத் தவிர வேறு ரக்ஷகர்கள் நமக்குக் கிடையாது; அவன் நம்மை கைவிட்டுவிட்டால் மற்ற ரக்ஷகர்களால் நம்மை ரக்ஷிக்க முடியாது. அவன் ஒருவனே ஸ்வதந்த்ரன் (தன் இஷ்டப்படி கார்யத்தை செய்யும் திறமையுள்ளவன்). நாமெல்லோரும் அவனது அடிமைகள். ப்ரஹ்மா, சிவன் முதலானவர்களும் அவன் நியமித்த கார்யத்தையே செய்து, அவனுக்கு தாஸ பூதர்கள். ஆகையால் பரம்பொருளான ஸ்ரீமத் நாராயணனையே நாம் சரணாகதியாகிற உபாயத்தை ஆசார்யர்கள் மூலம் செய்து அவனுடைய கைங்கர்யத்தைப் பெற வேண்டும் என்பது போன்ற இன்னும் அநேகார்த்தங்களை ஆசார்யன் பஞ்ச ஸம்ஸ்கார காலத்தில் நமக்கு உபதேசித்து நமக்கும் பகவானுக்கும் உள்ள ஸம்பந்தத்தை ஏற்படுத்தித் தருகிறார். இப்படிப்பட்ட ஆசார்யனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும் ? ஒன்று செய்யலாம். ஆசார்யன் உபதேசித்த எட்டு என்கிற

திருமந்திரத்தையும் இரண்டு என்கிற த்வயம், சரம ச்லோகத்தையும
தினமும் ஜபம் செய்து அம்மந்திரத்தில் சொல்லியிருக்கிறபடி நடந்தால்
அதுவே ஆசார்யனுக்கு நாம் செய்யும் ப்ரத்யுபகாரமாகும். மேலும்
இம்மந்திரங்களின் விசேஷார்த்தங்களை அவரவர்கள்
ஆசார்யர்களிடமும், மஹான்களிடமும் தெரிந்து கொள்ள வேண்டும்.

...........ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸன மாலிகா



# 3. ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன்
# ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேசிகனின் முத்துக்கள்
## புருஷார்த்த காஷ்டை

**வேதமறிந்த பகவர் வியக்க விளங்கிய சீர்**
**நாதன் வகுத்தவகை பெறுநாமவனல்லடியார்க்கு**
**ஆதரமிக்க வடிமையிசைந்தழியாமறைநூல்**
**நீத நிறுத்த நிலை குலையாவகை நின்றனமே**

**ஒருவன் மோக்ஷத்திற்காக சரணாகதி என்கிற உபாயத்தை அனுஷ்டித்த பிறகு இங்கு இருக்கும் நாள்வரை எப்படி இருக்க வேண்டும் என்பதை ஸ்வாமி தேசிகள் க்ருத்யாதிகாரத்திலும், உத்தரக்ருத்யாதிகாரத்திலும் புருஷார்த்தகாஷ்டாதிகாரத்திலும் நன்கு விளக்கியுள்ளார்.**

**அதாவது மோக்ஷோபாயமாக சரணாகதி செய்த சேதனன் இனி செய்ய வேண்டிய கார்யமில்லாமையால் நீர்பரனாய், பகவானருளிச்செய்த சரம ச்லோகத்தை ஸ்மரித்து அதன்படி பயமில்லாதவனாய். மோக்ஷ பலன் நிச்சயம் என்கிற ஜ்ஞான முடையவனாய் இருத்தல் வேண்டும். மேலும் ஸ்வநிஷ்டா பிஞ்ஞாநாதி காரத்தில் சொல்லியபடி உடம்பைக் காட்டிலும் ஆத்மா வேறு. அது பகவானுக்கு சேஷபூதன் என்கிற நினைவு தனக்கு இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படியான ஜ்ஞானமிருந்தால் ஒருவன் தம்மை தகாத வார்த்தைகளைச் சொல்லி நிந்தித்தாலும் ஆத்மாவைச் சொல்லவில்லை, உடம்பைச் சொல்கிறான் என்கிற அறிவு ஏற்பட்டு துக்கப்படாமல் இருக்க வேண்டும். இப்படி க்ருந க்ருத்யனாயும், ஸ்வரூப ஜ்ஞானம் பெற்றவனாய் "புருஷார்த்த காஷ்டை" உடையவனாய் இருக்க வேண்டும். நாம் சரணாகதியாகிற உபாயத்தினால் அடைந்த மோக்ஷ்ம் என்கிற பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலம் அவனடியார்களான பாகவதர்களுக்கு கைங்கர்யம் செய்தல் என்று அறிய வேண்டும். நமக்கு பகவானுகந்த கைங்கர்யங்களைச் செய்யவே ஸ்வரூடமாயிருப்பினும், பகவான் எதை உகக்கிறான் என்று ஆலோசித்தால் அவன் தன்னடியார்களுக்கு கைங்கர்யம் செய்வதையே தனக்கு உகப்பாகக் கொண்டாடுவதால் நமக்கு பாகவத கைங்கர்யமே உத்தேச்யம். இப்படி பாகவத கைங்கர்யத்தை இழந்தால் பகவத் கைங்கர்யமும் ஸித்திக்காது, ஆழ்வார்களும் பாகவத கைங்கர்யத்தின் சிறப்பை "அடியார்க் கென்னையாட்படுத்த விமலன் "உற்றது முன்னடியார்க்கடிமை" அடியார்கள் எந்தெம்மை விற்கவும் பெறுவார்கள் என்று புகழ்ந்துள்ளார்கள். ஆகையால் சரணாகதி செய்து கொண்ட நாம் இங்கு இருக்கும் நாள்வரை பகவானுக்கு உகப்பான பாகவத கைங்கர்யங்களைச் செய்து கொண்டு அதன் மூலம் பகவதனுக்ரஹத்தைப் பெறுவோமாக!**

**आराधनानां सर्वेषां विष्णोराराधनं परम् ।**
**तस्मात् परतरं प्रोक्तं तदीयाराधनं परम् ।।**

.......சதாபிஷேக மஹோத்ஸவ மலர்

# 4. ஸ்ரீ கிருஷ்ண லீலா தத்துவம்

## ராஸக்ரீடா தத்துவம்

பல கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணனுடன் ராஸக்ரீடை செய்கின்றனர். ஒவ்வொரு கோபஸ்த்ரீகளுக்கும் நடுவில் கிருஷ்ணனும் ஒவ்வொரு கிருஷ்ணனுக்கும் நடுவில் ஒரு கோபஸ்த்ரியுமாக சக்ராகாரமாக (சக்ரவடிவில்) வளைந்து நின்று நடுவிலே ஒரு கிருஷ்ண ரூபத்தை எடுத்துக் கொண்டு புல்லாங்குழல் வாசித்துக் கொண்டு சுற்றுவது ராஸக்ரீடை கிருஷ்ணன் அவ்வளவு ரூபங்களை எடுத்துக் கொண்டு கோபஸ்த்ரீ களைச் சுற்ற வைக்கிறான்.

**अङ्गनामङ्गनां अन्तरे माधवो माधवं माधवं चान्तरेणाङ्गना ।**

**इत्थमाकलिपते मण्डलेमध्यगः संजगौ वेणुना देवकीनन्दनः ।।**

அவர்களுக்குள் இரண்டிரண்டு பேருக்கும் இடையில் புகுந்தமையால் அந்த ஸ்த்ரீகள் தங்கள் பக்கத்திலேயே கிருஷ்ணன் இருப்பதாக நினைக்கும்படி இருந்தான். இப்படியாக ராஸக்ரீடை செய்தார்கள் என்று பாகவதம் பேசுகிறது.

**இதன் தத்துவம்**

கிருஷ்ணன் கீதையில்

**ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுன திஷ்டதி |**
**ப்ராமயந்ஸர்வபூதாநி யந்த்ராரூடானி மாயயா ||**

என்ற சுலோகத்தின் அர்த்தம் இங்கே காணப்படுகிறது. அதாவது ஈச்வரன் எல்லோருடைய சரீரத்திலும் மத்ய ப்ரதேசமான ஹ்ருயத்தில் இருந்து கொண்டு ஸர்வ ப்ராணிகளையும் யந்திரத்தில் வைக்கப்பட்ட பொருள்களைப் போல் சுற்ற வைக்கிறான்.

திருவிழாக் காலங்களில் குடை ராட்டினத்தில் குழந்தைகளை உட்கார வைத்துச் சுற்ற வைத்துக் காசு வாங்கிக்கொள்வது வழக்கம். இதை நாம் பார்த்திருக்கிறோம்.

அந்த யந்திரத்தை நடுவில் இருந்து கொண்டு ஒருவன் சுற்ற வைப்பதுபோல் பகவான் ஹ்ருதயத்தில் இருந்து கொண்டு நம்மைச் சுற்ற வைக்கிறான். '**அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா**' என்பது உபநிஷத்.

கோபஸ்த்ரீகள் ஜீவாத்மாக்கள் பரதந்த்ரர்களாக இருப்பதாலும் பகவானுக்கு உரியவர்களாக இருப்பதாலும், சேஷ பூதர்களாக இருப்பதாலும் ஜீவாத்மாக்கள் ஸ்த்ரீகள். ராஸக்ரீடையில் பெண்களைச் சுற்ற வைப்பது போல் அவரவர்களுடைய கர்மாதீனமாகக் கார்யங்களைச் செய்து கொண்டிருக்கும்படி நம்மைச் சுற்ற வைக்கிறான் என்பது ராஸக்ரீடையின் தத்துவம். ஸ்வாமி தேசிகனும் இதை யாதவாப்யுதயத்தில் உறுதிசெய்கிறார்.

......ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸன மாலிகா

# 5. பாஞ்சராத்ரம்  விஹகேந்த்ர ஸம்ஹிதை!

## ஶ்ரீநரஸிம்ஹ 74 திருநாமங்கள்!!

நரஸிம்ஹ விசேஷாஸ்தி சதுஸ்  ஸப்ததி விக்ரஹ:,!

நரஸிம்ஹேதி மூர்த்தாநாம் நாமதேயம் ஸுகத்யதே!!

ப்ரதமம் ஸ்வயம்  ந்ருஸிம்ஹஸ்யாத் விதாநாம் மோக்ஷ ஸிம்ஹகம்!

விஜயம் ந்ருஸிம்ஹமகம் சைவ சத்ராக்யம் நரஸிம்ஹகம்!,!

தீர்க்க ஸிம்ஹம் ச த்ருப்தாநம் விரூபம் ச ந்ருஸிம்ஹகம்!

பூர்ணாஸி ஸிம்ஹாப்தி ஸிம்ஹஸ்யாத்  லக்ஷ்மீ ஸிம்ஹா வுபாவபி!!

விஜயலக்ஷ்மி  ந்ருஸிம்ஹாக்யம் யோக  யோகேஸ்வராவபி!

தீப்தி ஸிம்ஹாப்தி ஸிம்ஹஸ்யாத் புஷ்டம்பூத ப்ரமாதிநம்!!

ஜ்வலா ந்ருஸிம்ஹ உக்ரஞ்ச ஓம் கோரம்ச ந்ருஸிம்ஹகம்!

விதாரண ந்ருஸிம்ஹஸ்யாத் அஹோபல ந்ருஸிம்ஹகம்!!

ஸ்தம்ப ஸிம்ஹ மஹாஸிம்ஹ பாதாள நரஸிம்ஹகம்!

லக்ஷ்யம் சாநந்த  ஸிம்ஹம்ச க்ரஹண ப்ரமநாவபி!!

ஆவேசந ந்ருஸிம்ஹம்ச அஷ்ட ஹாஸ  ந்ருஸிம்ஹகம்!

நவ வ்யுஹ ந்ருஸிம்ஹஸ்யாத்  சக்ரஸிம்ஹம் திசோதச!!

சண்ட ஸம்ஹாரஸிம்ஹம் ச ப்ரஸாதம் ப்ரம்ஹ ஸிம்ஹிகம்!

விஷ்ணு ரௌத்ரம் ச மார்தாண்டம்  சந்த்ர பைரவ ஸிம்ஹகம்!!

ப்ருதிவீ வாயு ஸிம்ஹம் ச ஆகாஸ நரஸிம்ஹகம்!

ஜ்வல நாதார ஸிம்ஹ:  ஸ்யாத் அம்ருதம் ஹம்ஸம் ததைவச!!

ஆத்ம ஸத்யம் ச யஜ்ஞம்ஸ்யாத் அந்நதாந ப்ரபாஸகம்!

விச்வரூபம்த்ரிதாரம் ச சதுஸ் ஸப்ததி விக்ரஹம்!!

ப்ராத: காலே படேந்நித்யம் ஸர்வசத்ரு  விநாசநம்!

ஸுக ஸௌக்யமவாப்நோதி நாரஸிம்ஹ ப்ரஸாத:!!

*********************************************************************************